**படன்கல பல்கலைக்கழக கல்லூரிம் - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

படன்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழக கல்லூரியின் நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கல்லூரியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கல்லூரி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கல்லூரியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை | | | |
| i. | நிதி பிரமாணம் 134(3) ஆம் அத்தியாயம் | மீளாய்வாண்டிற்காக தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வாளரினால் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க-வில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க-வில்லை. | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | நிதி பிரமாணம் 135 ஆம் பிரிவு | கல்லூரியின் வவுசர் தயாரித்தல், காசுப் புத்தகத்தில் பதிவு செய்தல், காசோலைகள் எழுதுதல், வங்கி இணக்கக்கூற்று தயாரித்தல், சில்லறை காசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் பெறுகைகள், அதற்குரிய பொருட்கள் கட்டளையிடல், இருப்பு வைத்தல் போன்ற கடமைகள் நிதி பிரமாணத்திற்கு அமைவின்றி ஒரு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. | நிதி பிரிவிற்காக பணிக்கப்பட்டிருப்பது ஒரு முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் ஆவதுடன் பதவியணி திருத்தத்தின் போது மேலதிகமாக கோரப்பட்ட போதிலும் இது வரையில் எந்தவொரு திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 12.1 ஆம் பந்தி | கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையிலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1994 யூன் 14 திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | முறையான அங்கீகாரமின்றி வினாத்தாள்கள் தயாரித்தல் மற்றும் தரப்படுத்தல், பரீட்சை கடமைகள் மற்றும் விடைத்தாள்கள் திருத்துதல் போன்றவற்றிற்காக முறையான அங்கீகாரமின்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றதுடன் மீளாய்வாண்டில் மட்டும் ரூபா 793,175 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக கல்லூரியின் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு மற்றும் உள்ளக பரீட்சைக்காக கொடுப்பனவு செய்வதற்கு NVQ 05 மற்றும் NVQ 06 இற்கான கொடுப்பனவு தொடர்பான கோரிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அக் கோரிக்கைக்கு இது வரையில் பதில் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,206,032 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த கடந்த ஆண்டின் மிகை ரூபா 2,569,081 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 4,775,113 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கடந்த ஆண்டிற்கு இணையாக மீண்டெழும் வழங்கல் ரூபா 3,430,000 இனால் குறைந்தமை பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| படன்கல பல்கலைக்கழக கல்லூரி 2016 ஒக்தோபர் 18 ஆம் திகதி தொடக்கம் பனாவல படன்கல விவசாய திணைக்களத்திற்கு சொந்தமான 5 ஏக்கர் காணியில் அமைந்துள்ள போதிலும் கணக்காய்வு திகதி 2022 சனவரி 28 ஆம் திகதி வரையிலும் காணி கையகப்படுத்தல் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | விரைவாக இந்த கையகப்படுத்தல் மேற்கொள்வதற்காக தெஹிஓவிட பிரதேச செயலாளர் அலுவலகத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் எங்கள் நிறுவனம் இது தொடர்பாக தொடர்ச்சியாக பின்னூட்டல் நடவடிக்கை எடுக்கின்றது. | விரைவாக காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 நவம்பர் மாத்தில் 6 கற்கைநெறிகளுக்காக பதிவுசெய்யப்பட்டிருந்த 179 மாணவர்களில் 44 மாணவர்கள் அதாவது 25 சதவீதம் ஒட்டுமொத்த கற்கைநெறியையும் விட்டுச் சென்றிருந்தனர். 03 ஆண்டுகள் காலப்பகுதிக்காக நடத்தப்படுகின்ற இந்த கற்கைநெறிகளுக்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இணைக்கப்பட்டிருந்த மாணவர்கள் 2022 மார்ச் மாதம் இறுதி வரையிலும் கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில ஆரம்பித்த கொவிட் 19 தொற்று நிலையினாலான தனிமைப்படுத்தல்கள், நிறுவனம் மூடப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் உரிய கால வரையறையினுள் நிறைவு செய்வதற்கு முடியாதிருந்தது. | மாணவர்கள் கற்கைநெறிகளினை விட்டுச் செல்வதற்கு காரணமாகிய விடயங்களை தேடியறிந்து அவற்றிற்கு தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் தொடர்புடைய காலத்தினுள் கற்கைநெறிகளை நிறைவு செய்வதற்கும் உரிய வேலைத்திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறன் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக 2015 ஆகஸ்ட் 24 ஆம் திகதி கல்லூரியின் விருந்தோம்பல் முகாமைத்துவ ஆய்வகத்தின் குளியறை நிர்மாணிப்பதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 464,400 பெறுமதியான குளியறை பொருத்துதல்கள் கணக்காய்வு திகதியான 2022 சனவரி 31 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்க-வில்லை. | புதிய நிர்மாணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தல் தொடர்பாக காணப்படுகின்ற அரச கொள்கை காரணத்தினால் இந்த நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிர்மாணிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால், அச் சொத்து பயன்படுத்தக் கூடியதாக இருந்திருக்கும். எவ்வாறாயினும் நோக்கத்திற்காக அச் சொத்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டில் ரூபா 02 மில்லியன் நிதியேற்பாட்டின் அடிப்படையில் விரிவுரைகள் நடத்துதல் மற்றும் ஏனைய கல்வி நடவடிக்கைகள் நிகழ்நிலை ஊடாக மேற்கொள்வதற்காக Learning Management system (LMS) முறைமையொன்று தாபிப்பதற்கு கூறு விலை அழைக்கப்படடிருந்தது. எனினும் தொழிநுட்ப மீளாய்வு குழுவின் பரிந்துரை அடிப்படையில் மீண்டும் பெறுகை செயன்முறை மேற்கொள்வதற்கு நேர்ந்துள்ளமையினால் அப் பணி 2022 மார்ச் மாதம் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மென்பொருள் வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை அழைக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு கூறு விலை மட்டும் பெறப்பட்டமையினால் சந்தையிலுள்ள ஏனைய Microsoft Licening முகவர்கள் வழங்குகின்ற விலையுடன் ஒப்பிட வேண்டுமென்று தொழிநுட்ப மீளாய்வு குழுவினால் 2021 திசெம்பர் 28 ஆந் திகதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனவே மீண்டும் பெறுகை செயன்முறை மேற்கொள்வதற்காக போதுமான காலம் காணப்படவில்லை. | தொழிநுட்ப மீளாய்வு குழுவின் பரிந்துரை அடிப்படையில் தாமதமின்றி நிறைவேற்றப்படல் வேண்டும். |